LIBRAR
29 JUN 20
Eastern University, Sri

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(மே/யூன் 2011)

**EDU 101** கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்களும் /மனித அபிவிருத்தியும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

---

01.(அ) கல்வியின் வரைவிலக்கணங்கள் வேறுபடக் காரணங்கள் யாவை? அவற்றைச் சுருக்கமாக விளக்குக?
(08 புள்ளிகள்)

(ஆ) சேர்.பேர்சினன், சோக்கிரதீஸ், தொம்சன் ஆகியோர் கல்விக்குக் கொடுத்த வரைவிலக்கணங்களைச் சுருக்கமாக ஆராய்க?
(06 புள்ளிகள்)

(இ) கல்வியின் நோக்கங்கள் தனியாள் விருத்திக்கு எவ்வாறான பங்களிப்பைச் செய்கின்றன என்பதை விளக்குக?
(06 புள்ளிகள்)

02.(அ) தத்துவத்திற்கும் கல்விக்குமிடையிலான தொடர்பைத் தத்துவஞானிகள் கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக?
(06 புள்ளிகள்)

(ஆ) "அனுபவக் கல்வியே சிறந்தது" என்ற கூற்றை பயன்பழிவாதம், இலட்சியவாதம் என்பவற்றைக் கொண்டு ஆராய்க.
(08 புள்ளிகள்)

(இ) எதிர்மறைக் கல்வி தொடர்பாக ரூசோ கூறிய கருத்துக்கள் தற்கால உலகில் எந்தளவிற்குப் பொருத்தமுடையன என்பதை ஆராய்க?
(06 புள்ளிகள்)

03.(அ) முன்பள்ளிக் கல்வி தொடர்பாக பிரெட்றிச் புரோபல், மரியா மொன்ரிசோரி, சுசான் ஐசாக் ஆகியோர் கூறிய கருத்துக்களைத் தற்கால முன்பள்ளிக் கல்வியுடன் தொடர்புபடுத்தி விளக்குக?
(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் முன்பள்ளிக் கல்வியில் காணப்படும் பிரச்சினைகளை ஆராய்க?
(10 புள்ளிகள்)

04.(அ) மனித வளத்தை அபிவிருத்தி செய்வதில் கல்வி நிறுவனங்களின் பங்கு பற்றி ஆராய்க?

(06 புள்ளிகள்)

(ஆ) மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான அடிப்படைக் கூறுகளைச் சுருக்கமாக ஆராய்க?

(07 புள்ளிகள்)

(இ) பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை உமது பிரதேசப் பாடசாலையை மையமாகக் கொண்டு ஆராய்க?

(07 புள்ளிகள்)

05.(அ) இன்றைய காலகட்டத்தில் மாற்றங்களைப் பொதுவாக மனிதர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இதற்கான காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) முரண்பாடுகள் மனிதவள விருத்திக்குத் தடையாகின்றன. முரண்பாடுகளது தாக்கத்தையும் அவற்றைத் தீர்ப்பதற்கான உத்திகளையும் ஆராய்க?

(10 புள்ளிகள்)

06.(அ) இயற்கை அனர்த்தங்களினாலும், யுத்த சூழ்நிலைகளினாலும் சிறுவர் உரிமைகள் எவ்வாறு மீறப்படுகின்றன என்பதைக் குறிப்பிட்டு அதற்கான தீர்வுகளைப் பெறுவதற்கு நீர் கூறும் ஆலோசனைகளையும் எடுத்துரைக்குக?

(08 புள்ளிகள்)

(ஆ) "கல்வியைப் பெறுதல்" என்ற சிறுவர் உரிமையைப் பெற அடிப்படையில் காணப்படும் பிரச்சினைகளைப் பட்டியற்படுத்துக?

(05 புள்ளிகள்)

(இ) முன்பள்ளிக் கல்வியில் பெற்றோரின் பங்குபற்றலை அதிகரிக்க நீர் கூறும் ஆலோசனைகள் யாவை?

(07 புள்ளிகள்)

07.(அ) ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பாகத் தற்போது இலங்கையில் காணப்படும் பிரச்சினைகள் பற்றிக் கருத்துரைக்க?

(07 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் ஆசிரியர் வாண்மை விருத்திக்கான சந்தர்ப்பங்களை விளக்குக?

(07 புள்ளிகள்)

(இ) ஆசிரியர் வாண்மை விருத்திப் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்க?

(06 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் நான்கிற்கு குறிப்பு எழுதுக.

(அ) கல்வி முறைகள்
(ஆ) கல்வியில் வீண்விரயம் ஏற்படும் சந்தர்ப்பங்கள்
(இ) நேர வளப் பயன்பாட்டில் பாக்கின்சன் விதி
(ஈ) கீழைத்தேய தத்துவஞானிகளின் கல்வி விரைவிலக்கணங்கள்
(உ) இலட்சியவாதமும் கலைத்திட்டமும்

(4x5=20 புள்ளிகள்)

********